<u>செய்தி வெளியீடு</u>

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களின் கவனத்திற்கு.

முன்னாள் படைவீரரின் வாரிசுகள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் பாரத பிரதமரின் கல்வி நிதியுதவி திட்டத்தின் கீழ் 2016–2017ம் கல்வி ஆண்டிற்கு நாடு முழுவதும் 5500 மாணவ/மாணவிகளு;க்கு நிதியுதவி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. BE, B.Tech, BDS, MBBS,B.Ed, BBA, BCA, B. Pharm, MBA,MCA,BALLB போன்ற படிப்புகளில் முதலாம் ஆண்டு பயில்பவர்கள்.

2. மேல்நிலைக்கல்வி/ பட்டப்படிப்புகளில் குறைந்த பட்சம் 60 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

3. அலுவலர் பதவிக்குக் கீழ் படைப்பணி புரிந்தவர்களின் வாரிசுகள் மட்டும்

4. இராணுவக் காரணங்களால் இறந்த மற்றும் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்களும் விண்ணப்பிக்கலாம்.

5. முன்னாள் படைவீரர்கள்/ விதவையரின் இரு குழந்தைகள் மட்டும் இந்நிதியுதவி பெறத் தகுதி படைத்தவர்கள்.

6. ஏற்கனவே ஒரு கல்விக்கு விண்ணப்பித்து இந்நிதியுதவி பெற்றவர்கள் மீண்டும் வேறொரு கல்விக்கு விண்ணப்பிக்கத் தகுதியில்லை.

7. ஒரு மாணவர் ஒரு கல்விக்கு மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

8. மாணவர்களது பெயரில் சேமிப்புக் கணக்கு பாரத மாநில வங்கி அல்லது பஞ்சாப் நேஷனல் வங்கியில் துவங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. மாணவர்/மாணவியரது ஆதார் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் 2016–2017ம் கல்வியாண்டிற்கு www.ksb.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1. முன்னாள் படைவீரர் சான்று
2. கல்லூரியிலிருந்து பெறப்பட்ட Bonafide certificate
3. மாணவரின் ஆதார் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதற்கான வங்கி அதிகாரியின் சான்று
4. வயதுச் சான்று
5. குறைந்தபட்ச கல்வித் தகுதிக்கான சான்று
6. வங்கிக் கணக்குப்புத்தகத்தின் முதல் பக்கம்
7. ஓய்வூதிய ஆணை

குறிப்பு – PMSS திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கு முன்பு மேற்காணும் வரிசை எண். 1 முதல் 03 வரையுள்ள சான்றுகளின் மாதிரிகளை முன்னாள் படைவீரர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுச் செல்லவும்.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க கடைசி நாள் 30.11.2016 ஆகும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப் பின்னர் பெறும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலன்,
சேலம் 636 001.

உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலன், சேலம் **636 001.**

# செய்தி வெளியீடு

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவையர்களின் கவனத்திற்கு.

முன்னாள் படைவீரர்களின் வாரிசுகள் உயர்கல்வி பயில பாரதப்பிரதமரின் கல்வி நிதியுதவி திட்டத்தின் கீழ் **2015–2016** கல்வி ஆண்டிற்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது **2015–2016**ம் கல்வியாண்டு முதல் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்குமாறு மைய முப்படைவீரர் வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் இவ்வலுவலகத்தில் இனி பெறப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலன்,
சேலம் **636 001.**